# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 10 புதன்கிழமை 23.04.2025 கதிர் 176



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது அநுர அரசு

# ரணிலால் மாத்திரமே நாட்டை மீட்க முடியும்

## முன்னாள் அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது எனவும், ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை மீட்க முடியும் எனவும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

7 ➤



## டொன் பிரியசாத் கொலை: மூவர் அதிரடியாகக் கைது!



கொழும்பு, ஏப். 23

அரசியல் செயற்பாட்டாளர் டொன் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

7 ➤

## இவ்வருடம் இதுவரை 37 துப்பாக்கிச்சூடுகள்

### 26 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 23

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

7 ➤



## பாப்பரசருக்கு இறுதி அஞ்சலி செலுத்த கர்தினால் மெல்கம் இத்தாலி விஜயம்



கொழும்பு, ஏப். 23

பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பாப்பரசரின் புனித உடலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இத்தாலிக்குப் பயணத்தை மேற்கொண்டார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இன்று காலை 9.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அபிதாபி சென்று, பின்னர் அங்கிருந்து மற்றுமொரு விமானத்தில் இத்தாலிக்குச் சென்று புனித பாப்பரசரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கஜேந்திரகுமார் அணிக்கே எமது ஆதரவு!

### யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

தேசிய மக்கள் சக்தியின் பொறிக்குள் வீழாது காலச் சூழலுக்கு ஏற்ப தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நோக்கில் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியப்

7 ➤




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## டேன் பிரியசாத் சுட்டு கொல்லப்பட்ட சம்பவம் மூன்று சந்தேக நபர்கள் கைது!

சமூக செயற்பாட்டாளர் டேன் பிரியசாத் சுட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, வெல்லம்பிட்டிய, மீதொட்டமுல்லவில் உள்ள 'லக்சந்த செவன' அடுக்குமாடி குடியிருப்பு பகுதியின் மேல் தளத்தில் நேற்று (22) இரவு நடாத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் டேன் பிரியசாத் சுட்டு கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால், பிஸ்டல் ரக துப்பாக்கியை பயன்படுத்தி இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு ஒரு விருந்தின் போது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் நடாத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சமூக செயற்பாட்டாளர் டேன் பிரியசாத் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக 6 பொலிஸ் குழுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கொலையை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த காஞ்சிபானை இம்ரானின் பிரிவினர் செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சமூக செயற்பாட்டாளர் டொன் பிரியசாத் உயிரிழப்பு!

கொழும்பு,ஏப்.23

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சமூக செயற்பாட்டாளர் டொன் பிரியசாத் சிகிச்சை பலனின்றி இன்று (23) காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, வெல்லம்பிட்டியவில் உள்ள 'லக்சந்த செவன' அடுக்குமாடி குடியிருப்பு பகுதியின் மேல் தளத்தில் நேற்று (22) இரவு 9:10 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சமூக செயற்பாட்டாளர் டொன் பிரியசாத் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கி சூட்டை நடாத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு பிஸ்டல் ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

லக்சந்த சேவன வீட்டு வசதி வளாகத்தில் வைத்து அவர் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் டேன் பிரியசாத் மீது நான்கு முறை துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில், இரண்டு தோட்டாக்கள் மார்பிலும் இரண்டு தோட்டாக்கள் தோள்பட்டையிலும் பாய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி சூட்டில் டொன் பிரியசாத் உயிரிழந்துவிட்டதாக முதல் தகவல்கள் வெளியாகிய போதும், அந்த செய்தி உண்மைக்கு புறம்பானது என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்திருந்தது.

எனினும் இன்று காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துவிட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனிதாபிமானமற்ற முறையில் இழுத்துச் செல்லப்பட்ட இளைஞர்- யாழில் பொலிஸாரின் அடாவடி!

யாழ்ப்பாணம், மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட வசிக்கும் இளைஞர் ஒருவரை கைது செய்த பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் அவரை அழைத்து சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் உள்ளூராட்சி வேட்பாளர்களுக்கான சநதிப்பு ஒன்று பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரான ஜெகதீஸ்வரன் சற்குணாதேவி என்பவர் செல்லவில்லை.

அதனையடுத்து, அவரது வீட்டுக்கு துப்பாக்கிகளுடன் சென்ற பொலிஸார், சந்திப்புக்கு அழைப்பு விடுத்தும் ஏன் வரவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு அவர், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் பருத்தித்துறை பிரதேச சபைக்கு தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால், தான் இப்போது வேட்பாளர் இல்லை என்ற காரணத்தை கூறி சந்திப்புக்கு வரவில்லை என பொலிஸாருக்கு பதிலளித்தார்.

அதற்கு பொலிஸார், தாங்கள் அழைத்தால் பொலிஸ் நிலையத்திற்கு வர வேண்டும் என அவரை அச்சுறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அவதானித்த சற்குணாதேவியின் மகன், அம்மாவை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என பொலிஸாரிடம் கோரிய போது, பொலிஸார் மகனுடனும் முரண்பட்டுக்கொண்டனர்.

பின்னர் குறித்த இளைஞனை மேலங்கி இல்லாமல், சாரத்துடன் கைது செய்த பொலிஸார், சாரத்தைப்பிடித்து இழுத்துச் செல்லும்போது சாரம் அவிழ்ந்ததை கூட கவனிக்காமல், மனிதாபிமானமற்ற முறையில் அவரை பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர்.

மேலங்கி இல்லாது, சாரம் அவிழ்ந்த நிலையில் வீதியில் இளைஞனை பொலிஸார் இழுத்துச் செல்லும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ள நிலையில், பல தரப்பினரும் பொலிஸாரின் இந்த செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# கட்டுக்குள் கொண்டு வரப்பட்ட மாத்தறை சிறைச்சாலை மோதல்- அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இடமாற்றம்!

கொழும்பு,ஏப்.23

மாத்தறை சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை இன்று (23) காலை அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை சிறைச்சாலையில் நேற்று (22) இரண்டு கைதிகள் குழுக்களிடையே அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

மாத்தறை சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகளை அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு அழைத்துச் செல்ல முயற்சித்த போதே இந்த அமைதியின்மை நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரண்டு கைதிகளை வேறொரு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல முயற்சித்த போது, ஒரு கூண்டில் இருந்து வெளியே வந்த கைதிகள் குழு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமைதியின்மையுடன் நடந்து கொண்டனர்.

சிறைச்சாலையின் மேல் பாதுகாப்பு அறைகளில் இருந்த சிறை அதிகாரிகளை கைதிகள் கற்களாலும், வேர்களாலும் தாக்கியுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக சிறை அதிகாரிகள் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடாத்தியுள்ளனர்.

எனினும், மோதலை கட்டுப்படுத்த முடியாத நிலை காரணமாக, சிறைச்சாலைக்கு வெளியே பாதுகாப்பை வழங்க பொலிஸ் விசேட அதிரடிப் படை வரவழைக்கப்பட்டிருந்தது.

மோதல் நிலை தொடர்ந்ததால் நேற்று (22) இரவு கண்ணீர்ப்புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சூழ்நிலையில், சிறையில் இருந்த 25 பெண் கைதிகளை அவர்களின் பாதுகாப்புக்காக அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு, சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மாத்தறை சிறையில் ஏற்பட்ட அமைதியின்மையால் மூன்று சிறைச்சாலை அதிகாரிகள் காயமடைந்து மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாத்தறை சிறைச்சாலை அத்தியட்சகர் மங்கள வெலிவிட்ட தெரிவித்தார்.

எனினும் எந்தக் கைதிகளும் காயமடையவோ அல்லது உயிராபத்து ஏற்படவோ இல்லை என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாத்தறை சிறையில் ஏற்பட்ட அமைதியின்மை இன்று (23) காலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும் சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் சிறைச்சாலையின் சேமிப்பு அறை மற்றும் பல பகுதிகள் இடிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தபால்மூல வாக்காளர்களுக்காக ‘ஈ’ சேவை வசதி!

தபால் வாக்காளர்கள் தமது வாக்கை செலுத்தும் இடம் மற்றும் சான்றளிக்கும் அதிகாரியை அடையாளம் காணுவதற்கு உதவும் வகையில் ‘ஈ’ சேவை ஒன்று நடைமுறையில் இருப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி தேர்தல் ‘ஈ’ சேவையை, **eservices.elections.gov.lk** என்ற இணைய முகவரியின் ஊடாக பிரவேசித்து, அதில் அரச அதிகாரிகளுக்கான தபால் வாக்களிப்பு தகவல்களுக்கான இணைப்பை அணுகி தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை மூலம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களையும், அவர்களின் குழுக்கள் மற்றும் கட்சிகளையும், அவர்களின் சின்னங்களையும் அடையாளம் காண எளிதாக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பொரளை பகுதியில் மரம் முறிந்து விழுந்ததில் ஏழு வாகனங்கள் சேதம்!

கொழும்பு,ஏப்.23

பொரளை கல்லறை சுற்றுவட்டத்திற்கு அருகில் ஒரு மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் 7 வாகனங்கள் சேதமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அத்துடன் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மரத்தை அகற்றி போக்குவரத்தை சீர் செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.



# கோடை வெயிலில் நீரிழிவு நோயாளிகள் இந்த உணவுகளை சாப்பிட கூடாது



நீரிழிவு நோயாளிகள் கோடைகாலத்தில் தங்கள் உடல்நலத்தில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இந்த நாட்களிலும் சர்க்கரை அளவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

சிலர் அதிக தாகம் எடுப்பதால், சர்பத், கரும்புச் சாறு மற்றும் குளிர் பானங்களையும் அருந்துகிறார்கள்.

இந்த விஷயங்கள் நீரிழிவு நோயாளிகளின் பிரச்சினைகளை அதிகரிக்கக்கூடும். நீரிழிவு நோயாளிகள் கோடையில் என்ன சாப்பிடக் கூடாது என்பது பற்றி இந்த பதிவில் பார்க்கலாம்.

கோடைக்காலத்தில், குளிர் பானங்கள், கரும்புச் சாறு போன்ற இனிப்பு பானங்கள் சர்க்கரை அளவை விரைவாக அதிகரிக்கும்.

இனிப்பு பானங்கள்: கடுமையான வெப்பம் உடலை நீரிழப்புக்கு ஆளாக்கும் என்பதால், உங்களை நீரேற்றமாக வைத்திருப்பது அவசியம்.

ஆனால் சர்க்கரைகள் அதிகம் உள்ள பானங்களை (கோலா, பீர் போன்ற கார்பனேற்றப்பட்ட பானங்கள் அல்லது பேக் செய்யப்பட்ட பழச்சாறுகள் போன்ற சர்க்கரை சிரப் சார்ந்த உணவுகள் ) உட்கொள்வது கிளைசெமிக் கட்டுப்பாட்டிற்கு தீங்கு விளைவிக்கும்.

அவற்றை எலுமிச்சைப் பழம், ஐஸ்கட் டீ, குளிர்காபி, மோர், ஸ்மூத்திகள் போன்றவற்றை குடிக்கலாம். இது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு சக்கரையையும் கட்டுக்குள் வைத்துக்கொள்ளும்.

பழச்சாறுகள்: நீரிழிவு நோயாளிகள் பழச்சாறுகளைத் தவிர்க்க வேண்டும். கடைகளில் விற்கக்கூடிய பழச்சாறுகளை குடிப்பது உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். இதில் இருக்கும் சக்கரை அளவு உடலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதை தவிர்த்து சக்கரை நோயாளிகள் முழு பழங்கள் அல்லது காய்கறிகளை உட்கொள்வது சிறந்தது. ஏனெனில் அவை உடலுக்கு நார்ச்சத்தை வழங்கி சக்கரையை கட்டுக்குள் வைக்கும்.

உறைந்த இனிப்பு வகைகள்: பெரும்பாலான உறைந்த இனிப்பு வகைகள் அல்லது ஐஸ்கிரீம்களில் சர்க்கரை உள்ளடக்கம் மற்றும்

கலோரிகள் அதிகமாக உள்ளன. மேலும் அவை இரத்த குளுக்கோஸ் அளவை அதிகரிக்கச் செய்யலாம். எனவே உறைந்த ஐஸ்கீறிம் போன்ற இனிப்புகளை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.

பேக்கரி பொருட்கள்: பிஸ்கட் மற்றும் குக்கீஸ்களில் சுத்திகரிக்கப்பட்ட மாவு அல்லது மைதா இருப்பதால் அவற்றை உட்கொள்வதைக் குறைக்க வேண்டும். இதை விட வீட்டில் செய்யப்படும் பார்லி மா பொருட்களை எடுத்துக்கொள்வது நல்லது.





# சொத்துக்குவிப்பு வழக்கு அமைச்சர் துரைமுருகனை விடுவித்த உத்தரவு ரத்து

சொத்துக்குவிப்பு வழக்கில் அமைச்சர் துரைமுருகனை விடுவித்த உத்தரவை ரத்து செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. தி.மு.க., பொதுச்செயலராகவும், அமைச்சராகவும் இருப்பவர் துரைமுருகன். தமிழகத்தில் கடந்த 1996-2001ம் ஆண்டு வரை நடந்த தி.மு.க., ஆட்சியில் அமைச்சராக இருந்த துரைமுருகன், வருமானத்துக்கு அதிகமான ரூ.3.92 கோடி சொத்துகளை குவித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

அதன்பிறகு அ.தி.மு.க., ஆட்சிக்காலத்தில் துரைமுருகன் மீது லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். பின், துரைமுருகன், அவரது மனைவி சாந்தகுமாரி ஆகியோர் மீது, வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்ததாக, வேலூர் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி அமைச்சர் துரைமுருகன் மற்றும் அவரது குடும்பத்தினரை விடுவித்து தீர்ப்பு வழங்கினார். இந்த தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரி கடந்த 2013ம் ஆண்டு அ.தி.மு.க., ஆட்சிக்காலத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் விசாரணைக்கு ஆஜராகாமல் துரைமுருகன் தவிர்த்து வந்தார். இந்த வழக்கில் அனைத்து தரப்பு விசாரணை முடிவடைந்தது. இந்த வழக்கில் இன்று ஐகோர்ட் நீதிபதிகள் தீர்ப்பு அளித்தனர். அமைச்சர் துரைமுருகனை விடுவித்த உத்தரவை ரத்து செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

துரைமுருகன் மற்றும் குடும்பத்தினருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் பதிவு செய்து சாட்சி விசாரணையை துவங்க வேலூர் சிறப்பு நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் அனுமதி அளித்தனர். (ஐ)





## காஷ்மீர் தாக்குதல்: தமிழர்கள் யாரும் உயிரிழக்கவில்லை: 3 பேர் காயம்

காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தில் தமிழகத்தை சேர்ந்த 3 பேர் காயமடைந்துள்ளனர்.

காஷ்மீரின் பஹல்காமில் நேற்று பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 28 பேர் உயிரிழந்துள்ளனர். 12 பேர் காயமடைந்து உள்ளனர். பயங்கரவாதிகளை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

இந்நிலையில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: பயங்கரவாத தாக்குதலில் தமிழகத்தை சேர்ந்த யாரும் உயிரிழக்கவில்லை. 3 பேர் காயமடைந்து உள்ளனர். இதில் 2 பேரின் உடல்நிலை சீராக உள்ளது. ஒருவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதிகள் இன்று மாலை காஷ்மீர் சென்று, உடனடியாக பணிகளை மேற்கொள்வார்கள். டில்லியில் உள்ள தமிழக அரசு அதிகாரிகள் அவர்களுடன் தொடர்பில் உள்ளனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## பயங்கரவாதத்தை ஒடுக்க மத்திய அரசுக்கு துணைநிற்போம்: முதல்வர் ஸ்டாலின்



"பயங்கரவாதத்தை ஒடுக்க மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு தமிழக அரசு துணை நிற்கும்" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டசபையில், காஷ்மீரில் நடந்த பயங்கரவாத தாக்குதல் குறித்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பஹல்காமில் அப்பாவி சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்டுள்ள மனிதாபிமானமற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு, கடும் கண்டனத்தையும், அதில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்து கொள்கிறேன். சுற்றுலா தலத்தில் நேற்று பயங்கரவாதிகள் மிக கொடூரமான தாக்குதல்களை நடத்தி இருக்கிறார்கள்.

சுற்றுலா பயணிகள் 26 பேர் கொல்லப்பட்ட தகவல், அதிர்ச்சியையும், துயரத்தையும் அளித்துள்ளது. காஷ்மீரில் மிக பிரபலமான சுற்றுலா தளமான பஹல்காமிற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து மட்டுமல்ல, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். அப்பாவி மக்கள் மீது இது போன்று நடத்தப்படும் பயங்கரவாத தாக்குதல்கள் கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

இந்த தாக்குதலுக்கு பயங்கரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது. அங்கு மோசமான சூழல் நிலவுகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது. பயங்கரவாத அமைப்புகள், பங்கரவாதிகள் எத்தைகைய எண்ணம் கொண்டவராக இருந்தாலும், அவற்றை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். இந்த தாக்குதலில் இதுவரை 26 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த தாக்குதலில் தமிழகத்தை சேர்ந்த சிலரும் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்ற தகவல் எனக்கு கிடைத்த உடன், டில்லியில் உள்ள தமிழக இல்லத்தில் 24 மணி நேரமும் செயல்படும் சிறப்பு மையம் செயல்படுவதற்கு உத்தரவிட்டு இருக்கிறேன். பயங்கரவாத தாக்குதல் நடக்க இந்திய மண்ணில் இடமில்லை. இந்த தாக்குதல்களை தடுத்து ஆக வேண்டும். எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திட மத்திய அரசு அனைத்து நடவடிக்கையும் எடுத்திட வேண்டும் என கேட்டு கொள்கிறேன். நடவடிக்கையை எடுத்திட தமிழக அரசு துணை நிற்கும் என்ற உறுதியை அளிக்கிறேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)

# தபால் நிலையங்கள் ஒருங்கிணைப்பு எதிர்ப்பு தெரிவிக்கும் ஊழியர்கள்

*கிளை தபால் நிலையங்களை ஒருங்கிணைக்கும் (இண்டிபெண்டெண்ட் டெலிவரி சென்டர்) நடவடிக்கைக்கு ஊழியர்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தலைமை தபால் நிலையங்களும், அதன் கீழ் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிளை தபால் நிலையங்களும் உள்ளன. இத்துறையில் தனியார் வருகைக்குப் பின், இவற்றின் முக்கியத்துவம் குறைந்து வருகிறது. இதனால் மத்திய அரசு தபால் நிலையங்கள், ஆர்.எம்.எஸ்., நிலையங்களை ஒருங்கிணைத்து செயல்பட ஏற்பாடு செய்கிறது. இதற்கான நடவடிக்கைகள் சென்னை, மும்பை உட்பட பல நகரங்களில் துவங்கிவிட்டன. இதனால் கீழ்மட்ட அளவில் பணியாற்றும் ஊழியர்கள் பாதிக்கப்படுவர் என்ற அச்சம் எழுந்துள்ளது.*

*தபால் துறையில் இயங்கும் தபால் ஊழியர்களின் தேசிய கூட்டமைப்பு என்ற ('என்.எப்.பி.இ.,) அமைப்பின் கீழ் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட போஸ்ட் மேன்கள், மல்டி டாஸ்க்ஸ்டாப் (எம்.டி.எஸ்.,) எனும் பல்திறன் ஊழியர்களும் உள்ளனர். இவர்கள் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும் என ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.*

*தபால் ஊழியர்கள் கூறுகையில்,"சிறிய தபால் அலுவலகங்களை பெரிய அலுவலகங்களுடன் ஒருங்கிணைக்கும் பணியை துவக்குவதால் பாதிக்கப்படுவோம். இலக்கு நிர்ணயித்து பொதுமக்களிடம் சேமிப்பு கணக்குகளை துவக்கும்படி கூறுகின்றனர். வங்கிகளில் பலர் கணக்குகளை துவக்கிவிட்டதால், பொதுமக்கள் கணக்கு துவக்குவதில் தீவிரம் காட்டததால், மனஉளைச்சல் ஏற்படுகிறது" என்றனர். இதனால் மாநில அளவில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.*

*கோட்ட பொருளாளர் திருப்பதி கூறுகையில் "தபால் நிலைய ஒருங்கிணைப்பால் போஸ்ட் மேன், எம்.டி.எஸ்., ஊழியர்கள் பாதிக்கப்படுவர். தற்போது ஒரு போஸ்ட் மேன் 20 கி.மீ., வரை சென்று பட்டுவாடா செய்கிறார் என்றால் ஒருங்கிணைப்பால் 35 கி.மீ., வரை சென்றுவர வேண்டும். ஆட்குறைப்புக்காக இத்தகைய நடவடிக்கையை எடுக்கின்றனர். இந்நடவடிக்கையை கைவிடாவிட்டால் போராட்டம் தொடரும்" என்றார். (ஐ)*





# நிறங்கள்!

நிறங்களை வைத்து இங்கு ஒரு பெரும் வியாபாரமே நடந்து வருகிறது. வெண் தோல்தான் அழகு என்கிற கற்பிதத்தை மக்கள் மத்தியில் விதைத்து ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் அழகு சாதன நிறுவனங்கள், அழகைத் தோல் நிறத்தோடு ஒப்பிடுவது எந்த வகையில் நியாயம்? தோல் நிறம் என்பது அந்தந்த நாட்டின் தட்பவெப்ப நிலையையும் சூழலையும் பொருத்தது. முன்பு கூறியது போலவே தோல் நிறமியான மெலனின் சூரியனின் புற ஊதாக் கதிர்களிடம் இருந்து மனிதனைக் காக்கும் ஒரு பாதுகாப்பு கவசம் போல் செயற்படுகிறது.

சரி, இந்தத் தோல் நிறமி மனிதர்களிடம் மட்டும்தான் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை இது தாவரங்கள், காய்கறிகள், பறவைகள், விலங்குகள், நுண்ணுயிரிகள் உள்ளிட்ட பல உயிரினங்களில் இது காணப்படுகிறது. தாவரங்களின் பச்சை நிறத்திற்கு க்ளோரோஃபில் **(chlorophyll)** என்னும் நிறமிதான் காரணம். கேரட், மாம்பழத்தின் செம்மஞ்சள் நிறத்திற்கு பீட்டா கரோட்டின் **(beta carotene)**, தக்காளியின் சிவப்பு நிறத்திற்கு லைக்கோபீன் **(lycopene)**, திராட்சை, நீல பெரி (டிடரந டிநசசநைள) போன்ற பழங்களின் நீலஃ ஊதா நிறத்திற்கு ஆன்தோசயானின் **(anthocyanin)**, புலிகளின் செம்மஞ்சள் நிறத்திற்கு பியோமெலனின் **(pheomelanin)** போன்ற நிறமிகள்தாம் காரணம். இந்த நிறமிகள் அனைத்தும், ஒளி தங்கள் மீது படும் போது, தங்களுக்கான குறிப்பிட்ட வண்ணத்தைத் தவிர மீதி அனைத்து வண்ணங்களையும் உள்வாங்கிக் கொள்ளும்.

இதில் மிகவும் சுவாரசியமான ஒன்றுதான் மயில் தோகையில் இருக்கும் வண்ணங்கள். மேற்குறிப்பிட்டவற்றைப் போல் மயில் தோகையில் நீலம் மற்றும் பச்சை நிறங்களுக்கான நிறமிகள் ஏதுமில்லை. பிறகு எப்படி மயில் தோகை அத்தனை அழகான வண்ணங்களை வெளிப்படுத்துகிறது? அதற்கு மயில்



தோகையின் கட்டமைப்புதான் காரணம். கெரட்டின் **(keratin)** மற்றும் மெலனின் புரதங்களாலான மயில் தோகையில் நானோ கம்பிகள் **(nanorods)** உண்டு. இந்த நானோ கம்பிகள் ஒளிக் கதிர்களை உள்வாங்கிக் கொண்டு, தங்கள் கட்டமைப்பிற்கேற்ப நீலம் மற்றும் பச்சை நிறங்களுக்கான அலைநீளங்களை மட்டும் பெருக்கி வெளிப்படுத்தும். கரட்டின், மெலனின், ஒளி மூன்றும் ஒருமித்து நடத்தும் ஓர் அழகிய வண்ண நாடகத்தால்தான் மயில் தோகை நீலம், பச்சை நிறங்களில் தெரிகிறது. இது தவிர மயில் தோகையில் கரோட்டினாய்ட்ஸ் **(carotenoids)** என்னும் நிறமியைப் படிய வைக்கும் செல்கள் இருப்பதால் அழகிய மஞ்சள், செம்மஞ்சள் நிறங்கள் காணப்படுகின்றன.

அப்படியானால் வெண்ணிற மயில்களில் என்ன நடக்கிறது? லூசிசம் **(leucism)** என்னும் பின்னடைவு குறைபாட்டால்தான் சில மயில்கள் வெள்ளை நிறத்தில் காணப்படுகின்றன. லூசிசம் என்பது மெலனின் உருவாக்கக்கூடிய செல்களின் உற்பத்தியையும், போக்குவரத்தையும், இயக்கத்தையும் முற்றிலுமாகப் பாதிக்கும் ஒரு மரபணுக் குறைபாடு. இது ஒரு குறிப்பிட்ட உறுப்பை மட்டும் பாதிக்க கூடியது. இதனால், பாதிக்கப்பட்ட உறுப்புகளில் மட்டும் கறுப்பு, அடர் காவி போன்ற நிறங்கள் வெளிப்படுவதில்லை. சில வகை லூசிசம், நிறமி செல்கள் அனைத்தையும் பாதிக்கும். உதாரணமாக, மயிலின் தோகை பகுதி மட்டும் வெள்ளையாக இருப்பதும், கண்கள் கரிய நிறத்தில் இருப்பதும் இந்தக் குறிப்பிட்ட மரபணு பிறழ்வால்தான். தோகையில் படியக்கூடிய கரோட்டினாய்ட்ஸால் வெளிப்படும் மற்ற மஞ்சள், செம்மஞ்சள் நிறங்கள் வெளிப்படாமல் இருப்பதற்கும் லூசிசம்தான் காரணம்.

பொதுவாகவே, மயில்கள் உணவிலிருந்துதான் கரோட்டினாய்ட்ஸ் நிறமிகளை எடுத்துக் கொள்ளும். பிறகு, எடுத்துக் கொண்ட நிறமிகளைத் தோகையில் படிய வைக்கும். இந்த வேலையைச் செய்யக்கூடிய நிறமி செல்கள் மரபணு பிறழ்வால் பாதிக்கப்பட்டிருக்கும். அதனால், நிறங்களை முழுமையாகத் தோகையில் படிய வைக்க முடியாது. அதுமட்டுமன்றி மெலனின் உருவாக்கத்தில் பிரச்சனை இருப்பதால், சாதாரண மயில் தோகையில் இருக்கக்கூடிய நானோ கம்பிகளின் கட்டமைப்பு, இந்த வெண்ணிற மயில்களில் சற்று வித்தியாசமாக இருக்கும். மாறுபட்ட கட்டமைப்பைக் கொண்ட நானோ கம்பிகளால் ஒளியிலிருந்து வரக்கூடிய ஒரு குறிப்பிட்ட அலைநீளத்தை மட்டும் பெருக்கி வெளிப்படுத்த முடியாது. இதுதான் சில மயில்கள் வெள்ளையாக இருப்பதற்கான காரணம். சில மயில் தோகைகள் முழுவதும் வெள்ளையாக இருக்காமல், ஆங்காங்கே மட்டும் வெள்ளையாகவும் மற்ற இடங்களில் வண்ணங்களோடும் இருக்கும். இதற்குப் பகுதி லூசிசம் **(partial leucism)** என்று பெயர்.

**இதில் மிகவும் சுவாரசியமான ஒன்றுதான் மயில் தோகையில் இருக்கும் வண்ணங்கள். மேற்குறிப்பிட்டவற்றைப் போல் மயில் தோகையில் நீலம் மற்றும் பச்சை நிறங்களுக்கான நிறமிகள் ஏதுமில்லை. பிறகு எப்படி மயில் தோகை அத்தனை அழகான வண்ணங்களை வெளிப்படுத்துகிறது? அதற்கு மயில் தோகையின் கட்டமைப்புதான் காரணம்.**



இதே பகுதி லூசிசம்தான் வெள்ளைப் புலிகளின் தோற்றத்திற்குக் காரணம். எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால் புலிகளின் தோலில் உள்ள சில பகுதிகளில் இருக்கும் செம்மஞ்சள் நிறத்திற்குக் காரணமான பியோமெலனின் நிறமியை உருவாக்கும் செல்கள் மரபணு பிறழ்வால் பாதிக்கப்பட்டு செயல் படாது. அதனால், பாதிக்கப்பட்ட இடங்கள் வெண்மையாகவும் மற்ற இடங்கள் கரிய நிறத்திலும் இருக்கும். இந்தக் கரிய நிறத்திற்கு மெலனின் நிறமிதான் பொறுப்பேற்கும்.

ஆய்வுக்கூடத்தில் பயன்படுத்தப்படும் வெள்ளெலிகளுக்கும் இதே லூசிசப் பின்னணிதானா? இல்லை, வெள்ளெலிகளின் வெண் தோலுக்கு அல்பினிசம் **(albinism)** என்று பெயர். இதுவும் ஒரு பின்னடைவு மரபணுக் குறைபாடுதான். அல்பினிசம் என்னும் குறைபாடிருப்பதால் இந்த வெள்ளெலிகளுக்கு அல்பினோ ரேட் **(albino rat)** என்கிற காரணப் பெயரும் உண்டு. அல்பினிசத்திற்கும் லூசிசத்திற்கும் என்ன வித்தியாசம்? இரண்டுமே வெண் தோல் நிறத்தைத்தானே கொடுக்கிறது? அல்பினசத்தால் பாதிக்கப்பட்டால் உடலில் உள்ள மெலனின் நிறமி செல்கள் அனைத்தும் செயலிழந்து ஒட்டுமொத்த உடலும் வெண்ணிறத்தில் காட்சியளிக்கும். கருவிழி, தலைமுடி உள்பட அனைத்தும் வெளிறிய நிறத்தில் இருக்கும். இது லூசிசத்தைப் போல் சில குறிப்பிட்ட உறுப்புகளைப் பாதிக்காமல் ஒட்டுமொத்த உடலையும் பாதிக்கும். அல்பினோ எலிகளின் விழிகள் சிவப்பு நிறத்தில் இருப்பதற்கும் இதுதான் காரணம்.

மனிதர்களிலும் இந்த அல்பினிசம் பரவலாகக் காணப்படுகிறது. இது போன்ற பின்னடைவு நோய்கள் ஏற்பட பெற்றோரிடமிருந்து வரக்கூடிய இரண்டு மரபணு மாற்றுருவிலுமே பிறழ்வு ஏற்பட்டிருக்க வேண்டும். இதில் மிக சுவாரசியமானது என்னவென்றால் மனிதனின் தோல் நிறத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ கிட்டதட்ட 150க்கும் மேற்பட்ட மரபணுக்கள் கட்டுப்படுத்துகின்றன. அந்தந்த நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றாற்போல இந்த மரபணுக்களின் கட்டமைப்பும் செயல்பாடும் வேறுபடும். உதாரணத்திற்கு, மெலனின் உற்பத்தியை நிர்ணயிக்கக்கூடிய மூன்று மரபணுக்களும் ஓங்கு **(dominant)** பண்புடையதாக இருந்தால் கரிய தோல் நிறம் வெளிப்படும். இதுவே, அந்த மூன்று மரபணுக்களுமே ஒடுங்கு **(recessive)** பண்புடையதாக இருந்தால் வெண்ணிறத் தோல் வெளிப்படும். இந்த மூன்று மரபணுக்களும் எப்படிச் சேர்கிறது என்பதைப் பொறுத்துதான் தோல் நிறம் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மரபணுக்கள் ஓங்கு பண்புடையதாக இருந்தால் அது அடர் நிறத் தோல் நிறத்திற்குக் காரணமாகும். இதுவே ஒன்றுக்கும் மேற்பட்ட மரபணுக்கள் ஒடுங்கு பண்புடையதாக இருந்தால் (7ஆம் பக்கம் பார்க்க..)

# குழந்தை பிறப்பை அதிகரிக்க ஊக்கத்தொகை: அமெரிக்கா பரிசீலனை



அமெரிக்காவில் குறைந்துவரும் குழந்தை பிறப்பை அதிகரிக்க செய்ய, பெண்கள் திருமணம் செய்து குழந்தை பெற்றுக் கொள்வதை ஊக்கவிக்க, ஊக்கத்தொகை வழங்குவது குறித்து அந்நாட்டு அரசு பரிசீலனை செய்து வருகிறது.

பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் மக்கள்தொகை குறைந்து வருகிறது. இது அந்நாடுகளுக்கு சவாலை ஏற்படுத்தி உள்ளது. ஜப்பான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து, முதியவர்கள் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. இதனையடுத்து, அந்நாட்டு இளைஞர்கள், இளம்பெண்கள் திருமணம் செய்யவும், குழந்தை பெற்றுக் கொள்வதை ஆதரிக்க அந்நாட்டு அரசுகள் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

அமெரிக்காவிலும் 1990களுக்கு பிறகு, குழந்தை பிறப்பு கணிசமாக குறைந்து காணப்படுகிறது. 2023 ம் ஆண்டு குழந்தைப் பேறு விகிதம் ஒரு பெண்ணுக்கு சராசரியாக 1.62 ஆக உள்ளது. இந்தப் பிரச்னை பெரிய பிரச்னையாக மாறும் என துணை அதிபர் ஜேடி வான்ஸ் எச்சரித்து உள்ளார். குழந்தை பெற்றுக்கொள்வதை அதிகரிக்க செய்ய வேண்டும் என எலான் மஸ்க் கூறியிருந்தார்.

இந்நிலையில், இந்நிலையை மாற்றி, பெண்கள் திருமணம் செய்து குழந்தை பெற்றுக்கொள்வதை ஆதரிக்க புதிய திட்டம் ஒன்றை அமெரிக்கா பரிசீலனை செய்து வருகிறது. இது தொடர்பாக ஆலோசனை நடத்தி வரும் அதிகாரிகள், குழந்தை பெற்றுக் கொள்ளும் தாய்மார்களுக்கு 5 ஆயிரம் அமெரிக்க டாலர் ஊக்கத்தொகை வழங்குவது குறித்தும் பரிசீலனை செய்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், அமெரிக்கா அளித்து வரும் 'ஸ்காலர்ஷிப்' திட்டத்தில், திருமணமாகி குழந்தை உள்ளவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கவும் அதிகாரிகள் பரிசீலனை செய்வதாகவும் தெரியவந்துள்ளது. (ஜ)

# போப் பிரான்சிஸ் இறுதிச் சடங்கு சனிக்கிழமை நடைபெறும்: வாடிகன் அறிவிப்பு



மறைந்த போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கு வரும் சனிக்கிழமை நடைபெறும் என வாடிகன் நிர்வாகம் அறிவித்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள, 140 கோடி கத்தோலிக்க கிறிஸ்துவர்களின் மதத் தலைவரான போப் பிரான்சிஸ், 88, இத்தாலியின் வாட்டிகன் சிட்டியில் நேற்று காலமானார். போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கிற்கான தேதியை கார்டினல்கள் அறிவித்தனர். அவரது இறுதிச் சடங்கு வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய போப் தேர்வு நடைமுறைகளை தொடங்கிய கத்தோலிக்க திருச்சபை

இதற்கிடையே, திறந்த சவப்பெட்டியில் போப் பிரான்சிஸ் உடல் இருக்கும் புகைப்படம், வீடியோவை வாடிகன் வெளியிட்டது. சிவப்பு அங்கிகளுடன், பிஷப் ஆடை அணிவிக்கப் பட்டு உள்ளது. போப் பிரான்சிஸ் உடல் அவர் வசித்த சாண்டா மார்டா இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதிச் சடங்கில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். (ஜ)



# தாக்குதலுக்கு நாங்கள் காரணமல்ல: சொல்கிறது பாகிஸ்தான்

" காஷ்மீரில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு நாங்கள் காரணமல்ல," என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் க்வாஜா ஆசிப் கூறியுள்ளார்.

காஷ்மீரின் பஹல்காமில் நேற்று நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஆதரவு பெற்ற லஷ்கர் இ தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ட் பிரன்ட் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது. இச்சம்பவத்திற்கு இந்திய தலைவர்கள் மட்டும் அல்லாமல் உலக தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதல் உலக தலைவர்கள் கடும் கண்டனம்

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகமும் 'பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தில் சுற்றுலா பயணிகள் உயிரிழந்ததற்கு வருத்தம் அளிக்கிறது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும்' எனக்கூறியிருந்தது.

இந்நிலையில் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் க்வாஜா ஆசிப் அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளதாவது: இந்த தாக்குதல் சம்பவத்திற்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அனைத்து வடிவங்களிலும் பயங்கரவாதத்தை நாங்கள் நிராகரித்து உள்ளோம். இந்தியாவில் நாகலாந்து முதல் காஷ்மீர் வரையிலும், சத்தீஸ்கர், மணிப்பூர் மற்றும் தென் மாநிலங்களில் புரட்சி நடக்கிறது. இதில், வெளிநாட்டினர் பங்கு கிடையாது. உள்ளூரை சேர்ந்தவர்கள் காரணம் எனக்கூறியதாக தெரியவந்துள்ளது. (ஜ)

# சவுதி அரேபியாவில் பிரதமர் நரேந்திரமோடி முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது



இரண்டுநாள் பயணமாக சவுதி அரேபியாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் போது, விண்வெளி, எரிசக்தி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில், ஆறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

மேற்காசிய நாடான சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், 2023ல் இந்தியாவுக்கு பயணம் செய்தார். அவரது அழைப்பை ஏற்று, பிரதமர் மோடி தற்போது அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த, 10 ஆண்டுகளில் மூன்றாவது முறையாக சவுதி அரேபியாவுக்கு பிரதமர் பயணம் மேற்கொண்டுள்ளார். வரலாற்று சிறப்புமிக்க ஜெட்டா நகருக்கு மோடி பயணம் செய்வது இதுவே முதல் முறை.

விமான நிலையத்தில் அவரை, அந்த நாட்டின் இளவரசர் சவுத் பின் மிஷால் பின் அப்துல் அஜீஸ் உள்ளிட்டோர் வரவேற்றனர். இரு நாட்டின் சிறப்பான நட்புறவை மதிக்கும் வகையில், பிரதமர் மோடிக்கு, 21 குண்டுகள் முழங்க, சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த, 2019ல் பிரதமர் மோடி, சவுதி அரேபியாவுக்கு சென்றபோது, பல்துறை கூட்டாளி கவுன்சில் உருவாக்கப்பட்டது. அதன் இரண்டாவது கூட்டத்தில், பட்டத்து இளவரசர் மற்றும் மோடி பங்கேற்க உள்ளனர்.

இதைத் தொடர்ந்து, இரு தரப்பு உறவுகள் தொடர்பாக இரு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர். விண்வெளி, எரிசக்தி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில், ஆறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர, ஹஜ் பயணம் தொடர்பான கட்டுப்பாடுகளை விலக்கி கொள்வது தொடர்பாக மோடி ஆலோசிப்பார் என்று கூறப்படுகிறது.

விமான நிலையத்தில் இருந்து ஹோட்டலுக்கு வந்த பிரதமர் மோடிக்கு, அங்கு வசிக்கும் இந்தியர்கள் சிறப்பான வரவேற்பை அளித்தனர். சவுதி அரேபியாவில், 27 லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். (ஜ)

# தனிநபர் ஒருவரின் அடிப்படை செலவுக்கு 16,318 ரூபா தேவை!

தனிநபரொருவரின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மாதம் ஒன்றிற்கு குறைந்தபட்ச தொகையாக 16,318 ரூபா தேவை என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மாதமொன்றிற்கு அதிகம் செலவாகும் மாவட்டமாக கொழும்பு பெயரிடப்பட்டுள்ளதுடன், கொழும்பில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மாதமொன்றிற்கு 17,599 ரூபா தேவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மாதமொன்றின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய குறைந்தளவு செலவாகும் மாவட்டமாக மொனராகலை பெயரிடப்பட்டுள்ளதுடன், அங்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய 15,603 ரூபா தேவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தலைமன்னாரில் உள்ள ராமர் பாலத்தின் ஆறாவது மணற்திட்டு வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட படகு சேவை திட்டம்!

*மன்னார், தலைமன்னார் பகுதியில் கடலுக்குள் காணப்படுகின்ற ராமர் பாலத்தின் ஆறாவது மணற்திட்டு வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்லும் படகு சேவை திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.*

*மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற இப் படகுச் சேவை தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*குறித்த திட்டம் மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும், திட்டத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்படும் எனவும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.*

*பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டு நீண்ட காலமாக தாமதமான இந்த திட்டத்தை வெகுவிரைவில் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*அத்துடன் இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக குழு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.*

*இந்த திட்டம் தொடர்பிலான கலந்துரையாடலில் வட மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பத்திநாதன், மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம். கீர்த்தி ஸ்ரீ சந்திரரத்ன மற்றும் பிரதேச செயலாளர், முப்படையினர், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

### டொன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டொன் பிரிய சாத் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து விசாரிக்க பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொலையை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பலைச் சேர்ந்த கஞ்சிபானி இம்ரானின் சகாக்கள் செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு டொன் பிரியசாத், வெல்லம்பிட்டியிலுள்ள லக்சந்த செவன அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரவைக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் தலைவர் அப்துல் பரீக் ஆரீப் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கும் அறிவிப்பை விடுத்திருந்த யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அது தொடர்பில் ஊடக சந்திப்பை இன்று புதன்கிழமை யாழ். ஊடக மையத்தில் நடத்தியது.

இதன்போது யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

"அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்/டன் யாழ். முஸ்லிம் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும் நட்பும் இருந்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது கொள்கையில் தடுமாறா நிலையுடன் பயணிக்கும் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி எமது மக்களின் நலன்களில் அதிக அக்கறையுடன் பயணித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப கொள்கையுடன் தமிழ்த் தேசியப் பேரவை இருக்கின்றது.

அதனடிப்படையில் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது அமைப்பின் ஆதரவை தமிழ்த் தேசியப் பேரவைக்கு வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். எனவே, முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு தமிழ்த் தேசியப் பேரவைக்கு ஆதரவை வழங்க வேண்டும்." - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் எம்.எஸ். ரஹீம் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ரணிலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"வருட இறுதியாக்கும்போது தற்போதைய அரசால் தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்படும். 4 வருடங்களில் தேர்தலுக்குச் செல்வார்களாம். அது பொய். தற்போதைய அரசுக்குப் பயணிக்க முடியாது. தேர்தலுக்கு முன்னரே அரசு மாறக்கூடும்." - எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே நாட்டை மீட்க முடியும். சவாலை ஏற்கக்கூடிய தலைவர் அவர் மட்டுமே. எனவே, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குத் தயாராவோம்." - எனவும் ராஜித சேனாரத்ன அறைகூவல் விடுத்தார்.

### இவ்வருடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவற்றில் 23 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களின் தலைமையில் இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய 14 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் தனிப்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## வவுனியாவில் கசிப்புடன் நேற்று இரவு ஒருவர் கைது

வவுனியா, ஏப். 23

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் 30 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்று இரவு வீடொன்றைச் சோதனை செய்த பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 போத்தல் சட்டவிரோத சாராயத்தைக் கைப்பற்றினர்.

அதனை உடமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 48 வயதுடைய நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## பாதுகாப்பற்ற நீர் குழியில் இருந்து 3 வயது சிறுவன் சடலமாக மீட்பு!

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சிறுவன் ஒருவனின் சடலம் பாதுகாப்பற்ற நீர் குழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதியான உடங்கா-02 பௌஸ் மாவத்தை பகுதியில், மூன்று வயது மதிக்கத்தக்க முஹம்மத் லுக்மான் என்ற சிறுவன், நீர் குழியிலிருந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (22) மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 3 மணித்தியாலமாக அப்பகுதியில் காணாமல் போயிருந்த குறித்த சிறுவனை பொதுமக்களுடன் இணைந்து பொலிஸாரும் தேடிய நிலையில் அச்சிறுவனின் வீட்டுக்கு அருகில் உள்ள வெற்றுக்காணியில் உள்ள பாதுகாப்பற்ற நீர்க்குழிக்குள் இருந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அத்துடன் இச்சம்பவத்தில் கிடைக்கப்பெற்ற ஊஊவுஏ காணொளி ஒன்றில் இனம் தெரியாத நபர் உயிரிழந்த சிறுவனை அழைத்துச் செல்லும் காட்சி ஒன்றும் பதிவாகியுள்ளது. எனினும் சிறுவனை யார் அழைத்து செல்கின்றார்கள் என்பது தொடர்பில் தெளிவாக அடையாளம் காண முடியவில்லை.

அத்துடன் குறித்த பாதுகாப்பற்ற நீர் குழிக்குள் சிறுவன் எப்படி விழுந்தார் என்பது குறித்தும் குழப்பமான ஒரு நிலை காணப்படுகின்றது.

சிறுவனின் சடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜெயலத் தலைமையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிறங்கள்!.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிறிய நிறத்திற்குக் காரணமாகும். இதுதான் தோல் நிறங்களின் அடிப்படை. இது மனிதர்களின் சூழலுக்கு ஏற்றவாறும் அவர்களின் மரபணுக் கட்டமைக்கு ஏற்றவாறும் தீர்மானிக்கப்படுகிறது. இதில் எந்த நிறம் அழகு என்பது அர்த்தமற்றது. இதில் எது பொருந்தி வாழத்தக்கது என்பதே சாமர்த்தியமான சிந்தனை. ஒவ்வொரு நிறத்துக்கும் ஒரு தனித்துவமான பண்பு உண்டு. கரிய தோல் நிறத்திலிருக்கும் மெலனின் நிறமி சூரியனின் புற ஊதாக் கதிர்களிடமிருந்து காக்கும். வெளிறிய தோல் உடையவர்கள் அதிகமான வைட்டமின் 'டி'யை உள்வாங்கக் கூடியவர்கள். இந்தப் பண்புகள் சூழலை அடிப்படையாக வைத்தே அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும்.

காலனிய ஆட்சியின் போது நிறத்தை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட முதலாளித்துவம் இன்றும் பல இடங்களில் நடக்கிறது. வெண்தோல் உடையவர்களை அதிகாரம், அந்தஸ்து, ஆதிக்கம் உடையவர்களாகப் பாவித்து, கரிய தோல் உடையவர்களை அவர்களுக்கு அடிமைகளாக்கி, உழைப்பைச் சுரண்டிக் கொண்டதில் இங்கிலாந்து வரலாற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் விளைவு, இங்கிலாந்து ஆட்சியின் கீழிருந்த ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும் தோல் நிறத்தால் பாகுபாடு ஏற்பட்டது. சீனா, ஜப்பான், தென் கொரியா, இந்தியா, ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகள் இன்றளவும் வெண்ணிறத் தோல் மீது அதிக மோகம் கொண்டுள்ளன. திருமணத்தின் போதுகூட வெண் தோலுடைய பெண்களையே அதிகம் விரும்பும் அவலம் இந்தியாவில் இன்னும் பல இடங்களில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தியாவில் அதிகம் விற்பனையான ஃபேர் அண்ட் லவ்லி (**fair and lovely**) நிறுவனத்தின் பெயர் 2020இல் க்ளோ அண்ட் லவ்லி (**glow and lovely**) என்று பெயர் மாற்றப்பட்டது. வெண் தோல்தான் அழகு என்பதை வலியுறுத்துவதாக எழுந்த குற்றச்சாட்டை முன்னிட்டு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அமெரிக்காவில், கறுப்பின மக்கள் மீது நடத்தப்பட்ட போலீஸ் அராஜகத்திற்கு எதிராக 2013இல் தொடங்கப்பட்ட 'டீடயஉம டளைநள அயவவநச' இயக்கத்திற்குப் பிறகு உலக நாடுகளின் பல பகுதிகளில் இனம் சார்ந்த மற்றும் நிறம் சார்ந்த சமூக வேறுபாட்டைப் பற்றிய விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இன்றைய திரையுலகம் கறுப்பு, மாநிறத்தில் இருக்கும் கதாநாயகிகளை அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளது.

ஆனால், இந்த மாற்றங்கள் அனைத்தும் ஒரு சிறிய அளவிலேயே நடக்கிறது என்பதுதான் நிதர்சனம். தோல் நிறத்திற்கும் அழகுக்கும் அந்தஸ்திற்கும் அதிகாரத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தோல் நிறம் என்பது சூழலையும் மரபியலையும் அடிப்படையாக வைத்துக் கட்டமைக்கப்பட்டது என்கிற புரிதல் ஏற்பட வேண்டும். அதுதான் நிறம் சார்ந்த பாகுபாட்டைக் குறைக்கும் ஒரு சிறந்த வழி.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2025ல் வெளியிடப்பெற்றது.